**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 597/2021 |
| நாள் | 04.03.2026 |
| வா.சா.1 | கனகராஜ் |
| வயது | 66 |
| ஊர் | சணப்பிரட்டி கிராமம் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**2,3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை**

வழக்கின் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். நான் தாவாவில் கோவிலுக்கு செல்ல பாதை வேண்டும் என்று பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவாவில் குறிப்பிட்டுளள கோவில் ஆத்துர் கிராமம் சர்வே எண். 783/பி –ல் அமைந்துள்ளது. அரசு தரப்பில் இவ்வழக்கில் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரத்தை நான் தெரிந்து கொண்டேன். சர்வே எண். 785/7, 785/ஏ16 என்ற சர்வே எண்ணின் வழியாகத்தான் கோவிலுக்கு வண்டிபாதை செல்கிறது. மேற்படி சர்வே எண்கள் வழியாகத்தான்தாவாவில் குறிப்பிட்டுள்ள கோவிலுக்கு வழிபாதை செல்கிறது என்பதை காட்டுவதற்கு உண்டான ஆவணங்கள் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். 2,3 பிரதிவாதிகளை நான் ஏன் இவ்வழக்கில தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால், தாவா கோவிலுக்கு அருகே அமைந்துள்ள நிலஉரிமையாளருக்கும், கோவில் நிர்வாகத்திற்கும் இடையே நான்கெல்லை பிரச்சனை ஏற்பட்டதால் 2,3 பிரதிவாதிகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துளளேன். மேற்படி பிரச்சனை சம்பந்தமாக நான் வருவாய் அதிகாரியிடம் மனு கொடுத்தேன். வருவாய் துறையினர் சரியான நேரத்தில் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதால், நான் அசல் வழக்கை தாக்கல் செய்தேன். வருவாய் துறையினர் தாவா சொத்திற்கு வந்து சொத்தை அளந்து

அத்துக்காட்டிவிட்டு சென்றார்கள் என்றால், சரிதான். தற்போது தாவாவில் குறிப்பிட்டுள்ள வழித்தடம் குறித்து எவ்வித பிரச்சனை இல்லை என்றால், சரிதான். வழக்கில் குறிப்பிட்டுள்ள பிரச்சனை தற்போது முடிவுக்கு வந்துவிட்டது என்றால், சரிதான். நான் தாவாவில் கோரியுள்ள பரிகாரத்தை வருவாய் துறையினர் ஏற்கனவே எனக்கு சரிசெய்து கொடுத்துவிட்டதால், தற்போது மீண்டும் 2,3 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் பரிகாரம் எதுவும் கோரமுடியாது என்றால், சரியல்ல. நான் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி கிடைக்கக்கூடியது இல்லை என்றால், சரியல்ல.

**குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.